திருப்பூர் மாவட்டம் - வெள்ளகோவில் வட்டாரம்

பச்சாபாளையம் கிராம ஊராட்சி மனைப்பிரிவு அனுமதி உத்தரவு

பச்சாபாளையம் கிராம ஊராட்சி தலைவர்/செயல் அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை :- திரு எம்.வரதராஜன்

.....

மனைப்பிரிவு அனுமதி எண் :- 01/2024-2025 **நாள் :- 06.06.2024**

பொருள் :- மனைப்பிரிவு அனுமதி - திருப்பூர் மாவட்டம் - வெள்ளகோவில் ஊராட்சி ஒன்றியம்-பச்சாபாளையம் கிராம ஊராட்சி - பச்சாபாளையம் கிராமம் ரீ.ச.எண்.517/2B-ல் மனைப்பிரிவிற்கான அனுமதி அளித்து உத்தரவிடுதல் - தொடர்பாக,

பார்வை :-

1. அரசாணை எண். 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(1)துறை , நாள். 04.02.2019 மற்றும் அரசாணை எண். 16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(1) துறை , நாள்:- 31.01.2020

2. பச்சாபாளையம் கிராம ஊராட்சிக்கு மனைப்பிரிவு சாலை பகுதிகள் (மூலை முடுக்கு உட்பட) மற்றும் பொது உபயோகம் மற்றும் TANGEDCO-க்கான பொது உபயோகம் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானப்பத்திரம் ஆவணம் எண்:- 3650/2023 நாள்:- 14.08.2023 மற்றும் 3651/2023 நாள்:- 14.08.2023

3. உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,திருப்பூர் மாவட்டம் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்:- YKPZOIDT/2023/TCP நாள்:- 08.09.2023

4. மனுதாரர் திரு S.சம்பத் அவர்கள் கட்டணங்கள் செலுத்திய விபரம் பெறப்பட்ட நாள் :- 06.06.2024

உத்தரவு :-

தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள்-2019 துணை விதி 47-ன் படி திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டம், வெள்ளகோவில் ஊராட்சி ஒன்றியம், பச்சாபாளையம் கிராம ஊராட்சிக்குட்பட்ட பச்சாபாளையம் கிராமம ரீ.ச.எண்:- 517/2B -ல் 1.95 ½ ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் அமைக்கப்பட்ட மனைப்பிரிவிற்கான இடத்தில் பார்வை 2-ல் காணும் மனைப்பிரிவு சாலை பகுதிகள் (மூலை முடுக்கு உட்பட) மற்றும் பொது உபயோகத்திற்கான இடம் மற்றும் TANGEDCO -க்கான பொது உபயோகம் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானப்பத்திரம் ஆவணம் எண்:- 3650/2023 நாள்:- 14.08.2023 மற்றும் 3651/2023 நாள்:- 14.08.2023 படியும், பார்வை 4-ல் காணும் நகர்

ஊரமைப்பு துணை இயக்குநர்/உதவி இயக்குநர்,மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்:- YKPZOIDT/2023/TCP நாள்:- 08.09.2023 -ன் படி மேற்கண்ட இடத்தில் அமையவுள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு SWP/DTCP/TIRUPPUR/LAYOUT No:- 251/2023 என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டதன் படியும், மனுதாரர் திரு S.சம்பத் அவர்கள் கட்டணங்கள் செலுத்திய விபரம் பெறப்பட்ட நாள்:- 06.06.2024-ன் படியும் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்:-

1. தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் - 2019 துணை விதி 47-ல் மனைப்பிரிவிற்காக விதிக்கப்பட்டுள்ள அனைத்து விதிகளும் இம்மனைப்பிரிவிற்கு பொருந்தும்.எனவே பொருத்தமான விதிகள் அனைத்தும் பின்பற்றப்பட வேண்டும்.

2. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,திருப்பூர் மாவட்டம் செயல்முறை ஆணை ந.க.எண்:- YKPZOIDT/2023/TCP நாள்:-08.09.2023-ன் படி அங்கீகரிக்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு SWP/DTCP/TIRUPPUR/LAYOUT No:- 251/2023 வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள்,சாலையின் அமைப்புகள்,அளவுகள் மற்றும் பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

3. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 0.6 மீ x 1.2 மீ அளவிலான நிரந்தர அறிவிப்பு தகவல் பலகை பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தமாக நிறுவப்பட வேண்டும்.

4. மனைப்பிரிவு சாலை பகுதிகள் (மூலை முடுக்கு உட்பட), பொது உபயோகத்திற்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட இடம் மற்றும் TANGEDCO-க்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட இடத்தை சுற்றிலும் அமைக்கப்பட்ட கம்பி வேலி உட்பட அனைத்தையும் எவ்வித சேதாரமும் ஏற்படாமல் ஐந்து வருடத்திற்கு மனை ஏற்பாட்டாளர் தங்களது சொந்த செலவில் பராமரிப்பு செய்ய வேண்டும்.

M. Vanthana 06/06/24

தலைவர்/செயல் அலுவலர்
பேரூராட்சி
வெள்ளகோவில்
திருப்பூர் மாவட்டம்

பெறுதல் :-

திரு S.சம்பத்,
த/பெ சுப்பிரமணியன்,
3/2, 5-வது வீதி, கே.பி.என் காலனி,
திருப்பூர் - 641 601.

நகல் :-

1. உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு துறை,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர், திருப்பூர் மாவட்டம்.

2. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), வெள்ளகோவில் வட்டாரம்.